**நுவரெலியா மாநகர சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 18 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நுவரெலியா மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையின் 02 வங்கிக் கணக்குகளில் அடையாளம் காணப்படாத பெறுவனவுகள் ரூபா. 707,503, கேள்வி வைப்புக்கான வட்டி ரூபா. 59,069 மற்றும் வங்கிக் கட்டணம் ரூபா. 19,508 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் வருடங்களில் சரியாக கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.. |
| (ii) | சபைக்குச் சொந்தமான நூதனசாலையில் காணப்படும் பழைய புகைப்படங்கள் மற்றும் 160 நூதனப் பொருட்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படவோ அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவோ இல்லை | பெறுமதி மதிப்பிடப்பட்டு சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் வருடங்களில் பெறுமதியை மதிப்பிட்டு சரியாக கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்... |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மூலதன நன்கொடை பெறுவனவு ரூபா. 32,590,125 மீண்டெழும் பெறுவனவுகளின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் வருடங்களில் வரவுசெலவு வரைவினை தயாரிக்கும் பொழுது மூலதனப் பெறுவனவுகள் வரவுக் கணக்கு உருவாக்கப்பட்டு சரியாக கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| (iv) | ரூபா. 199,933 பெறுமதியான காலாவதியான மேற்கத்திய மருந்து தொகையொன்று இறுதித் தொகையினுள் உள்ளடங்கியிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் தொகை மதிப்பீட்டில் குறித்த பொருட்களை ஒதுக்கிவிட்டு சரியாக கணக்குகளை தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதியன்று நிலுவையாகவிருந்த கடை வாடகை மீதியினுள் தற்பொழுது உடைத்து ஒதுக்கப்பட்டுள்ள 11 கடைகளுக்கான பட்டியலிடப்பட்ட அறவிடப்பட முடியாத ரூபா. 14,315,850 உள்ளடக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கௌரவ ஆளுனர் அவர்களின் அனுமதியின் பேரில் எதிர்வரும் ஆண்டில் சரியாக கணக்குகளை தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | மூலதனச் சொத்துக்கள் விற்பனை மூலம் பெறப்பட்ட ரூபா. 120,375 மூலதன வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் மூலதன வருமானம் என சரியாக கணக்குகளை தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று 02 வருடங்களைக் கடந்த முற்பண மீதி ரூபா. 1,359,500 ஆகவிருந்தது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சும்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவித்து முற்பணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று 01 வருடத்தைக் கடந்த செலுத்த வேண்டிய கணக்குகளின் மீதி ரூபா. 20,187,306 ஆகவிருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏதிர்காலத்தில் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபை அதிகாரச் சட்டத்தின் 187 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி சபையினால் ரூபா. 51,757,720 தொகை தனியார் வங்கியொன்றில் நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. | குறித்த சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | தற்பொழுது காணப்படும் மீதி ரூபா. 22,800,000 ஆகும். |
| (ஆ) | 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவு | செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | ஏதிர்காலத்தில் செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | 189 மற்றும் 486 | 2014 – 2017 காலப்பகுதியினுள் 07 சந்தர்ப்பங்களில் சபைக்கு வருமானமாகக் கிடைத்த செல்லுபடியற்றதாகியிருந்த 07 காசோலைகளின் பெறுமதி ரூபா. 178,916 அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | இக் காசோலைகளின் பெறுமதியினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571(3) | 219 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்து 02 வருடங்களைக் கடந்த | குறித்த நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் | ஏதிர்வரும் ஆண்டில் சீர் செய்வதற்கான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ரூபா. 5,911,275 | செயற்படல் வேண்டும். | எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 134,594,992 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 118,906,103 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 95,692,651 | 83,604,526 | 57,163,626 | 81,606,048 | 99,068,258 | 86,939,615 | 84,830,288 | 94,065,436 |
| வாடகை | 96,011,675 | 75,776,178 | 42,978,483 | 70,457,361 | 91,634,275 | 55,030,277 | 53,153,903 | 43,300,208 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 24,411,786 | 18,300,742 | 16,306,462 | 2,082,780 | 23,572,000 | 20,787,120 | 19,900,958 | 1,421,860 |
| ஏனைய வருமானம் | 153,006,000 | 34,054,053 | 47,207,614 | 45,015,662 | 169,848,000 | 126,584,810 | 134,978,554 | 40,306,647 |
| | 369,122,112 | 211,735,499 | 163,656,185 | 199,161,851 | 384.122,533 | 289,341,822 | 292,863,703 | 179,094,151 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மொத்த நிலுவை வருமானம் வருடத்தினுள் 11.2 வீதத்தினால் அதாவது ரூபா. 20,066,707இனால் அதிகரித்திருந்தது. | நிலுவை வருமானத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஏதிர்பார்த்த வருமானத்தினை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 746,395 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 33,639,258 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | பெற வேண்டிய வருமானத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஏப்ரல் 30ஆம் திகதியாகும் பொழுது நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 402,587 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 10,680,860 தொகையும் அறவிடப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபை அதிகாரச்சட்டத்தின் 267(1) ஆம் பிரிவிற்கமைவாக அதிகாரச் சட்டத்தின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளை அமுல்படுத்தும் செயற்பாட்டிற்கு தேவையான உப விதிகளை அமைத்தல் மற்றும் அவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளல் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும், உப விதிகள் அமைக்கப்படாத சந்தர்ப்பங்கள் 11 காணப்பட்டன. | சபைக்கு வருமானம் ஈட்டத்தக்க சந்தர்ப்பங்களை இனங்கண்டு உப விதிகளை அமைத்து வருமானத்தை ஈட்டல். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |

## (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக நகர சபை போதியளவில் அறிந்திருக்கா திருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |

## (இ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) 2008 பெப்ரவரி 01ஆம் திகதியும் 1534/18 இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட 2008இன் 01ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (பாதுகாப்பு மற்றும் தரம்) கட்டளையின் பிரகாரம், கழிவுப்பொருள் முகாமைக்கான மத்திய சுற்றாடல் அதிகார சபையூடாக அனுமதிப்பத்திரம் பெற வேண்டியிருந்த போதும், சபையின் கழிவுப்பொருள் முகாமை நிலையத்திற்காக 2020 ஏப்ரல் வரையிலும் அவ்வாறான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரத் தினைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக்குச் சொந்தமான சமார் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள பம்பரகலே கல் குழி 2008 டிசம்பர் 24ஆம் திகதி குத்தகை ஒப்பந்தம் மூலம் வியாபாரி ஒருவருக்கு வருடத்திற்கான வாடகை ரூபா. 26,500 எனும் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.ஒப்பந்தத்தின் இரண்டாவது உப பிரிவிற்கமைவாக ஒப்பந்தக் காலம் 2012 டிசம்பர் 24ஆம் திகதியுடன் முடிவடைகின்ற போதும் கல் குழி திரும்பப் பெறப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணி மற்றும் கல் குழி ஆகியன மீளப் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) | அரச உடமையாக்கப்பட்ட காணிகள் தொடர்பான சட்டவரைவின் 217ஆம் பிரிவின் பிரகாரம் குடியிருப்புக்காக வீடுகளை குத்தகைக்கு விடும் பொழுது காணியின் இயற் பெறுமதியில் 4 வீத வருடாந்த வரி அறவிடப்பட முடியுமாக இருந்த போதும், அவ்வறு அறவிடப்படாது 2017 ஆகஸ்ட் 25ஆம் திகதிய தீர்மாணத்திற்கமைவாக சபையினால் குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணிகளுக்காக ரூபா. 4,000 முதல் ரூபா. 1,000 வரையான பல்வேறு கட்டணங்கள் அறவிடப்பட்டு வந்துள்ளது. | குறித்த சட்டங்களின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |
| (இ) | தாபனக் கோவையின் விதிமுறைகளுக்கமைவாக முறையாக | குறித்த நிலுவை வீட்டு வாடகை அறவிடப்பட | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | சம்பளத்திலிருந்து வீட்டு வாடகை அறவிடப்படாமை<br><br>காரணமாக 2020 பெப்ரவரி 26ஆம் திகதியன்று ரூபா. 141,388 நிலுவை வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 43 பதவிகளுடன் தொடர்பான 121 வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) | 2014 நவம்பர் 12 திகதியும் 25/2014 இலக்கமும் கொண்ட சபையின் தீர்மாணத்தின் கீழ் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்த 178 ஊழியர்களுக்கான 2019 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கான சம்பள ஒதுக்கீடான ரூபா. 9,855,156 மத்திய மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சும்பளதித ஒதுக்கீடு செய்துகொள்வதற்காக குறித்த நிறுவனத்துடன் செயற்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் xxivஆம் பாகத்தின் 1.6 மற்றும் 4 பிரிவுகளுக்கமைவாக, சபையில் தற்காலிகமாக சேவையாற்றியிருந்த, இடமாற்றம் பெற்றிருந்த, ஓய்வு பெற்றிருந்த மற்றும் மரணமடைந்திருந்த, சேவை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் இடைவிலகிய அதிகாரிகள்/ஊழியர்கள் 67 பேர்களிடமிருந்து ஒரு வருடத்திற்கும் மேலான | தாபனக் கோவையின் பிரகாரம் கடன் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |

| | | |
|---|---|---|
| காலப்பகுதியிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மற்றும் முற்பணம் ரூபா. 2,198,261 அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2014 – 2017 இடைப்பட்ட காலப்பகுதிக்கான வணிக நடவடிக்கைகளுடன் தொடர்பான அனுமதிக்கப்பட்ட 21 நிர்மாணங்களுக்கான விண்ணப்பங்களுக்கான இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இது குறித்து ஆராயப்பட்டு இணக்கச் சான்றிதழ் வழங்ஙப்படல் வேண்டும. | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) மாநகர சபை அதிகாரச் சட்டத்தி 37(1)(ஆ) பிரிவிற்கமைவா நகரத்தினுள் அமைந்துள்ள வீதிக மற்றும் பாதசாரி மேடைக மாநகர சபைக்குச் சொந்தமா இருந்த போதும், பழை பேல்கடை அமைந்துள் பிரதேசத்தில் வாகன நிறுத்தற் கூ நகர அபிவிருத்தி அதிகாரசபையி அனுமதிச் சீட்டினைப் பயன்படுத் அறவிடப்பட்டு வந்திருந்தது. | இந் நிலை சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |
| (இ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆ திகதி நகர அபிவிருத்தி நி திரண்ட கணக்கில் காணப்பட ரூபா. 10,567,198 ஆகிய மீ பிரயோசனமான முறையில் நக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கா பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந் நிதி நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஈ) 2009 மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கடைகளுக்கான வரி | புதிதாக குத்தகை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |

| | | |
|---|---|---|
| அறவிடப்பட்டிருந்தது. | அதற்கமைவாக சபையின் வருமானத்தினை அதிகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

### 3.5 கருத்துமுறன்பாட்டுக்கு வழிவகுக்கும் கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு கொள்வனவு செய்யப்பட்ட இழுவண்டியுடன் கூடிய 02 டிரக் வண்டிகளின் பெறுகைச் செயன்முறையின் போது, அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருந்த கேள்விமனு, கேள்விமனு சமர்ப்பிக்கப்பட வேண்டிய தினத்திலிருந்து 05 நாட்கள் பிந்தியமை காரணமாக நிராகர்க்கப்பட்டதனால், சபைக்கு ரூபா. 2,215,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ரூபா. 3,157,500 பெறுமதியான 05 வாகனங்கள் 04 ஆண்டுகளுக்கு மேலான காலவீச்சில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | திருத்தம் செய்வோ தொகை மதிப்புக் குழுவின் பரிந்துரைக்கமைய செயற்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |

### 3.7 வெளிப்படையான மோசடிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நுவரஎலிய கிரெகரி பூங்காவிற்கு முன்னால் உடபுஸ்ஸல்லாவ பாதைப் பாதுகாப்பு எல்லைக்கும் | சட்ட விரோத குடியிருப்புக்களை அகற்ற நடவடிக்கை | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |

| | | |
|---|---|---|
| நீரோடை பாதுகாப்பு எல்லைக்கும் நடுவில் அமைந்துள்ள 3.2 பர்சஸ் விஸ்தீரணமான அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி மாநகர சபைக்குச் சொந்தமானதெனக் கருதப்பட்டு 2017 ஆகஸ்ட் 25ஆம் திகதிய 971ஆம் இலக்க தீர்மாணத்தின் படி 2017 செப்டம்பர் 07ஆம் திகதி வருடாந்த அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டிருந்தது. மேலும், இக் காணியில் காணப்படுகின்ற சட்ட விரோத குடியிருப்புகள் 2020 மார்ந் வரை அகற்றப்படவில்லை. | எடுத்தல் வேண்டும். | |

3.8 **பெறுகைகள்**

**ஓப்பந்த நிர்வாகம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா. 9.516 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட புருவரி கமுனு மாவத்தை நீர் சுத்திகரிப்பு தொகுதியை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த காணியின் உறுதி தீர்க்கப்படாத நிலையில், கேள்விமனு கோரப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு நிர்மாணப் பணி கையளிக்கப்பட்டிருந்த போதும், நிர்மாணத்திற்கான காணி வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடுவிக்கப்படாததன் காரணமாக திட்டத்தை ஆரம்பிக்க முடியாதிருந்தது. இப் பெறுகை நடவடிக்கைக்காக பத்திரிகை விளம்பரங்களுக்காக ரூபா. 160,712 வீணாக செலவிடப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக்கு அமைவாக செயற்படல் வேண்டும். குறித்த காணி கைப்பற்றப்பட்டு அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |
| நுவரஎலிய கொல்ப் மைதானத்தைச் சுற்றி உடற்பயிற்சி | பெறுகைகள் வழிகாட்டிக்கு அமைவாக | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். |

| | |
|---|---|
| நடைபாதையொன்றை அமைக்கும் திட்டம் 2019 வசந்தகாலக் கொண்டாட்டங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டிய அவசர தேவை இருந்ததால், 08 கட்டங்களின் கீழ் நிர்மாணிப்பதற்கான விலைமனு கோரப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு அவசரமாக நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய வேண்டும் எனத் தீர்மாணிக்கப்பட்டிருந்த போதும், 2019 ஜுலை 18ஆம் திகதியாகும் பொழுது I,ii,iii,vii கட்டங்களின் வேலைகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை. அதேபோன்று ரூபா. 20,288,757 பெறுமதியான இத் திட்டம் தொடர்பான பெறுகைச் செயற்பாடுகளின் போது தேசிய மட்ட போட்டி அடிப்படையிலான விலைமனு கோரல் மேற்கொள்ளப்படாது மட்டுப்படுத்தப்பட்ட போட்டி அடிப்படையிலான விலைமனு கோரப்பட்டிருந்ததன் காரணமாக நிர்மாணப் பணிகளுக்கான போட்டியடிப்படையிலான விலைகளை பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இல்லாது போயிருந்தது. | செயற்படல் வேண்டும். |
| மிக அவசரமானதும் முக்கியமானதுமாகக் கருதப்பட்டு பெறுகைகள் வழிகாட்டல் சோவைக்கு முறனாக 2017ஆம் ஆண்டு ஏப்ரல் வசந்தகாலக் கொண்டாட்டங்களுக்கான ஒரு தேவைக்காக ரூபா. 2,993,335 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 கொள்கலன் மலசலகூடங்கள் 2020 வரை பயன்படுத்தப்படாதிருந்தன. | கொள்கலன் மலசலகூடங்கள் பயன்படுத்தப்படும் வகையில் எதிர்கால திட்டங்கள் அமைக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கிரெகரி குளம் இல. 01 பூங்காவில் படகு வீடுகளுக்குப் பக்கத்தில் அமைந்துள்ள மலசலகூட புனர்நிர்மாணத்தின் போது பூங்காவின் நடைபாதை வழியாக பாரமான வாகனங்களைச் செலுத்தியதன் காரணமாக பாதை இறங்கியுள்ளதுடன் சேதமடைந்துள்ளது. | சேதத்திற்கான நட்டஈடு குறித்த பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |